கலை, இலக்கியத்
திங்கள் இதழ்

# கலைக்கண்

டிசம்பர்
1972

கண்: 1 | பரிதாபிஞு மார்கழிமீ 9உ (23-12-72) | ஒளி: 8


"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு." — திருக்குறள்

# 1974-ல் உலகத் தமிழ் மாநாடு

## தனிநாயக அடிகள் விளக்கம்

**வித்துவான் சி. ஆறுமுகம்**

1974ஆம் ஆண்டு ஜனவரி முதல் வாரத்திலேயே யாழ்ப்பாண மாநகரில், உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெறும். மகாநாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் தமிழாராய்ச்சி முதலிடம் வகிக்கும். ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைதற்குரிய தகுதிவாய்ந்தவர்கள், பல்கலைக்கழகப் பட்டதாரிகளும் பண்டிதர்களும், வித்துவான்களும், புலவர்களும் ஆவர். பட்டம் பெருதவர்களாயினும் அறிவிலும் ஆராய்ச்சியிலும் வல்லுநர்களாயிருப்பின் அத்தகையோரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனுப்புதற்குத் தகுதியுடையவராவர்.

தமிழின் பல்வேறு துறைகளிலும் எழுதப்பெறும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஏற்கப்படும். கட்டுரைகள் சிறப்பாக ஈழத்துத் தமிழ் வளர்ச்சிபற்றியனவாகவும், ஈழத்துத் தமிழர் வாழ்வும், வளமும் பற்றியனவாகவும் அமைந்திருத்தல் வேண்டும். கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதலாம். ஆனல் உலகத் தமிழறிஞர் பலர் கலந்துகொள்ள இருப்பதனலும் தமிழரின் பெருமைகளையும், தமிழ் மொழியின் அரும்பெருஞ் சிறப்புக்களையும் வேற்றுநாட்டினரும் அறிந்துகொள்வது பெரும் பயன்தரும் ஆதலானும் தமிழாராய்ச்சி மகாநாடு ஆங்கிலத்திலேயே நடைபெறும். ஆயினும் சில முக்கிய நிகழ்ச்சிகள் தமிழில் நடைபெறும்.

ஆராய்ச்சிகள் மட்டுமன்றிப் பொதுமக்கள் பலருக்கும் பயன்படக்கூடிய வகையில் சிறப்புச் சொற்பொழிவுகளும் விழாவி லிடம்பெறும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களின் உள்ளத்தில் தமிழுணர்ச்சியை ஊட்டுவதும் இம் மகாநாட்டின் நோக்கங்களில் ஒன்ருகும். பூம்புகாரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு பெரும் வெற்றியை ஈட்டியது. முத்தமிழ் நிகழ்ச்சிகளும் அம் மகாநாட்டில் நடைபெற்றன. அவ்வாறே ஈழத்திலும் ஒருபெரும் எழுச்சியை உண்டாக்கவேண்டும். முத்தமிழ் நிகழ்ச்சிகளும் மகாநாட்டில் இடம்பெறவேண்டும். உறங்கிக்கிடக்கும் மக்களின் உள்ளத்தில் புதிய எழுச்சியை உண்டாக்க வேண்டும். உயர்ந்த தரமுடைய இசை நிகழ்ச்சிகளும், உள்ளங்கவரும் நாடகங்களும், கலைச்சுவை நிரம்பிய நடனங்களும் விசேட நிகழ்ச்சிகளில் இடம்பெறும். இத்தகைய ஒரு பெரும் விழாவை நடாத்துதற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும், கலைஞர்களும் பல்வேறு துறைகளிலும் பயன்படப்பாடுபடவேண்டும். பல்கலைக்கழகங்களும், ஆசிரிய கலாசாலைகளும உறுதுணைபுரிய வேண்டும். நன்னேக்குடன் இயங்கும் மன்றங்கள் யாவும் இணைந்து செயற்படவேண்டும். ஈழத்தின் தனிச் சிறப்பினை உலகம் அறியக்கூடிய வகையில் இம் மகாநாடு சிறப்புடன் நிகழவேண்டும். பன்மொழி வல்லுநர்கள் ஈழத்தின் இருபெரும் மொழிகளுக்கிடையில் உள்ள தொடர்புகளையும், அவற்றின் தாக்கங்களையும், ஆக்கங்களையும் ஆராய்ந்து கட்டுரைகள் அனுப்பவேண்டும். ஈழத்தின் நற்பெயரையும், தமிழின் மாண்பினையும் போற்றும் வகையில் குறுகிய வேறுபாடுகள் நீக்கிப் பரந்த மனப்பான்மையுடன் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

மகாநாடு சிறப்புடன் நடைபெறப் பணமும் முக்கியமானது. பணவுதவியளிக்கப் பலரும் முன்வந்துள்ளனர். நிதியைப்பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை. நிதிபடைத்த பிரபுக்களும், காசு வைத்திருக்கும் கனவான்களும், மனம்படைத்த உழைப்பாளிகளும் பணத்தை வாரிவாரி உதவுவார்கள் என்பது நிச்சயம். பல்வேறு துறைகளில் ஈடுபட்டுழைக்கும் வைத்திய நிபுணர்களும், சட்ட அறிஞர்களும், பொறியியல் வல்லுநர்களும், அரசகரும உத்தியோகத்தர்களும் ஆயிரம் ஆயிரமாக அள்ளியள்ளித் தருவார்கள். எனவே உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை உன்னத நோக்குடன் சிறப்பாக நடைபெறச் செய்தற்கு அறிஞர்கள் முன்வந்து உழைக்க வேண்டும். வடமாகாணம் மட்டுமன்றிக் கிழக்குமாகாணமும் இவ்விழாவினைச் சிறப்புற நடாத்த உறுதியளித்துள்ளது. மலையகமும் மனமுவந்து விழாவைச் சிறப்பிக்கும். இவ்விழா, ஈழத்துத் தமிழ்மக்களின் ஒருமித்த கருத்துடன் சிறப்புடன் நிகழும். ஆட்சியினரும் இவ்விழா சிறப்புடன் நிகழத் துணைபுரிவர்.



உயிரெழுத்தையும் ஆய்த எழுத்தையும் கொண்டு ஓவியக் கலைஞர் அழகுறப் புனைந்த தமிழ்த் தாயின் திருவுரு.

### என் உயிர்

கனியிடை யேறிய சுளையும்—முற்றல்
கழையிடை யேறிய சாறும்
பனிமல ரேறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை யேறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன வென்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் காண்பீர்.

பாரதிதாசன்


கண்ணுக்குக் கண்ணன
கலைக்கண்ணின்
புத்தாண்டு வாழ்த்துக்கள்!


## மாலையில் ஒரு மலர்

**"பாவலன்"**

ஒரே இன மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலையில் எந்த மலர் சிறந்தது என்று தனியாக எடுத்துக் கூறிவிட முடியாது. அதேபோலத் தான் திருக்குறளிலும் எந்தக் குறள் சிறந்தது என்று கூறிவிட முடியாது. அவரவர் தத்தம் அறிவுக்கும் விளக்கத்துக்கும் ஏற்ப இது சிறந்தது இது நயம் வாய்ந்தது என்று கூறுவார்கள். ஆயினும் மாலையில் உள்ள மலர்கள் அத்தனையும் சிறந்தனவே.

இந்தக் கட்டுரையில் ஒரு மலரின் சிறப்பை நோக்குவோம். புணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்தில்,

"தம்மில் இருந்து
தமதுபாத் துண்டற்ருல்
அம்மா அரிவை முயக்கு"

என்பது ஒரு குறள்.

இந்தக் குறளின் பொருள் "அழகிய மாமை நிறத்தையுடைய அரிவை முயக்கம் இன்பம் பயத்தற்கண் தமக்குரிய இல்லின்கண்ணிலிருந்து உலகோர் தந்தாளான் வந்த பொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் கட்குப்படுத்துத் தங் கூற்றை உண்டாற் போலும் என்பதாகும்.

தலைவி மூலம் தான் அடைந்த இன்பத்தை தலைவன் கூறுவதாக அமைந்த இந்தக் குறள் தலைவியின் இன்பம் தன்னுழைப்பால் வந்த பொருளைத் தன் இல்லில் இருந்து உண்பது போன்றது என்று கூறுகின்றது.

பிறர்க்குக் கொடுக்கும் இன்பத்தை ஈகை என்ற அதிகாரத்தில் குறிப்பிட்ட திருவள்ளுவர் புணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்தில் தலைவியால் தலைவன் அடையும் இன்பத்தை விளக்குவதற்குப் பகுத்துண்ணும் இன்பத்தை உவமையாகக் கூறியுள்ளார்.

வேருேர் அதிகாரத்தில் கூறிய ஓர் உண்மையை மற்ருேர் அதிகாரத்தில் ஓர் உண்மையை விளக்குவதற்கு உவமையாகக் கொண்டது திருவள்ளுவரின் தனிப் பெருஞ் சிறப்பு.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

# கலை சமைப்போம் உயர் நிலை அமைப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிதாபிஸூ மார்கழிமீ 9உ (23-12-72)

# பார்வை

## உலகளாவிய தமிழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

என்பது பாரதியாரின் கவிதைக் கனவு. தமிழ் தமிழகத் தமிழாக இல்லாமல், தமிழ்கூறும் நல்லுலகத் தமிழாக நிற்காமல், உலகத் தமிழாக உயரவேண்டுமென்ற பாரதியாரின் கனவை நனவாக்க உதித்ததே உலகத் தமிழாராய்ச்சி மன்றம். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மகிமையுண்டா? திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணங்க வேண்டாமா? அந்நியராட்சியின்பேருகத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு வந்த பெரியோர்களான வீரமாமுனிவர், தத்துவபோதகர், போப்பையர், கால்டுவெல், கிறீன் வைத்தியர் போன்ருேர் தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார். அதனுற் தமிழோசை உலகமெங்கும் பரந்தது. ஏன்? வடமொழியே அனைத்துமென்றும், ஆங்கிலமே சர்வமும் என்றும் போலித்தனத்தில் மயங்கிக்கிடந்த தமிழருக்கும் என்றுமுள தென்தமிழின் புகழை அறிவித்த பெருமையும் இவர்களையே சாரும்.

தனிமனிதர்களின் முயற்சியினுல் தமிழ் ஞாயிற்றின் புகழ் ஓங்கிநிற்கிறதே. உலகெங்கும் பரந்துகிடக்கும் தமிழார்வலரின் ஒன்றுபட்ட இயக்கம் ஒன்று உருவானுல்..? இவ்வினு பலருடைய உள்ளத்திலும் எழுந்ததுண்டு. எனினும் அதனைச் செயற்படுத்தும் வாய்ப்பு ஈழத்தவர்க்கே கிடைத்தது. ஈழத்தவரான தவத்திரு. தனிநாயக அடிகளாரே உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் பிறப்புக்கும் வளர்ச்சிக்கும் தனிநாயகமாக விளங்குகிருர். ஈழத்தவர்களின் முயற்சியால் உருவான மன்றத்தின் முதல் மாநாடு ஈழத்திலேயே நிகழ்ந்திருக்கவேண்டும். அது மலேசியாவில் நிகழ்ந்தது. இரண்டாவது மாநாடு தமிழாய்ந்த தமிழனை முதலமைச்சாகக்கொண்டிருந்த தமிழ்நாட்டில் நிகழ்ந்தது. மூன்ருவது மாநாடு பிரான்சு நாட்டின் பாரிஸ்மாநகரில் இடம்பெற்றது. நான்காவது மாநாட்டை நடாத்தும் பேறு எமக்குக் கிடைத்துள்ளது.

இம்மாநாடு ஈழத்தமிழரின் வரலாறு, மொழி, பண்பாடு மதம் முதலியவைபற்றிய முறையான ஆய்வுகளுக்கான திறவுகோலாக அமையவேண்டும். உலகத்தினர்க்கு மட்டுமன்றி எமக்கும் அறிவு கொளுத்தும் வகையில் இம்மாநாடு நடைபெறவேண்டும். உயர்ந்தோர் குழாத்தினர் சிலர் கூடித் தமிழிலோ ஆங்கிலத்திலோ கருத்துப் பரிமாறல்களை நிகழ்த்திவிட்டுப் பிரியும் மாநாடாக அமையாது, இந்நாட்டில் வாழும் கற்ருேரும் மற்ருேரும் மேற்படி ஆராய்ச்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டுழைப்பதற்கான முனனேடியாகவும் உலகத் தமிழாராய்ச்சிமன்ற ஆராய்ச்சிக் கருத்தரங்கு அமையவேண்டும். இவ்வாராய்ச்சிக் கருத்தரங்குகளிலே கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறமுடியாத ஆயிரக்கணக்கானேர்க்கு இக்கருத்தரங்குகளிற் கூறப்பட்ட கருத்துக்களை எடுத்துரைப்பதற்கான பொதுவரங்குகளும் நிறுவப்படவேண்டும்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்."

என்ற பாரதியின் கனவை நனவாக்குவதாக உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு அமைதல் வேண்டும்.

தமிழகத்துப் பூம்புகாரில் நிகழ்ந்த இரண்டாவது மாநாட்டின்போது தமிழகத்துத் தமிழறிஞர்க்குச் சிலை நிறுவப்பட்டது. அப்போது நாவலருக்குச் சிலை எடுக்காதது ஏன்? தமிழ்வளர்த்த தாமோதரர் புறக்கணிக்கப்பட்டது ஏன்? நல்லைநகர் ஞானப்பிரகாசரை மறந்தது ஏன்? என்ற கேள்விகள் எங்கும ஒலித்தன. அதன்பின் நாவலர், விபுலநாந்தர், பாவலர் துரையப்பாபிள்ளை ஆகிய தமிழறிஞர்களின் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. அன்று அவர்கள் செய்தார்கள்; நாம குறை கூறினேம். இன்று நாமே செயற்படும் நிலைவந்துள்ளது. அன்றைய குறையை நிறைவு செய்வோம்.

எமக்குள் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. உலகம் முழுவதும் எம்மையே நோக்கும் நிலை உருவாகிறது. எனவே, எமது வேறுபாடுகளை மறந்து தமிழ்த்தாயின புதல்வர்கள் என்ற ஒரே கொள்கையோடு மாநாட்டின் சிறப்புக்காக உழைப்பது எமது தலையாய கடனுகும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு".

# சொல்வன்மை

செந்தமிழ்ச் செல்வர்
பண்டிதர் இ. நமசிவாயம்

மான் என்று ஒரு பொருளுண்டு. ஒரு சொல்லுமுண்டு. மான் என்ற சொல்லைக் கேட்ட உடனே கேட்டவன் உள்ளத்தில் மான் என்ற பொருளின் தோற்றம் உண்டாகிறது. இவ் விதமே உலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் சொல் வடிவம் ஒன்று உண்டு. பொருள்உலகு இருப்பது போலச்சொல்லுலகுஎன்றும் ஒன்று உண்டு. திருக்குறளின் சிறப்புரைக்க வந்த புலவர் ஒருவர், 'எல்லாப்பொருளும் இதன்கண் உள' என்றனர் என்றது திருக்குறள் சொல்லுலகு முழுவதையும் அடக்கியுள்ளது என்ற கருத்தைப் புலப்படுத்தும். இந்தச்சொல்லுலகிலே சஞ்சரிக்கின்ற வாய்ப்பு இவ் வுலகில் மன உணர்வுடைய மனிதருக்கே உரியது. மனித வடிவுடையவனை மனிதனுக்குவது இச் சொல்லுலகேயாம். சொல்லுக்கு வரிவடிவும் உண்டு. ஒலிவடிவும் உண்டு. வரிவடிவச் சொற்களைக் கண்ணிஞற் கண்டும் ஒலிவடிவச் சொற்களைக் காதிஞற் கேட்டும் பொருளுணர்வு பெறுகின்ருேம். பொருள் உலகை ஐம் பொறிகளினுலும், சொல்லுலகை அவ்வைம்பொறிகளிற் கண்ணினுலும், காதினுலும் மாத்திரமே அறிகின்ருேம். இங்ஙனம் சொல்லுலகையறிதற்குக் கண்ணும் காதும் மாத்திரமே கருவிகள் ஆதல்பற்றியன்றே.. கண்ணும் காதுமாகிய அவ்விரண்டும் ஐம்பொறிகளிற் சிறந்தவை என்று போற்றப்படுகின்றன. இன்னும் இதனுனன்றே அறிவுக்குக் காட்சி என்றும் கேள்வி என்றும் பெயர் வழங்குவதெனலாம். கண்ணின் தொழிலாகிய காட்சியும், காதின் தொழிலாகிய கேள்வியும் அவற்ருன் ஆய அறிவினை உணர்த்தி நிற்றல் காண்க.

கண்ணிஞற் கற்பதிலும், காதிஞற் கேட்பதே சிறந்ததென்பர். 'கற்றலிற் கேட்டலே நன்று' என்பது ஆன்ருேர் வாக்கு. "கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றயவை" என உலகத்துள்ள எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது கல்வி என்று கூறிய தெய்வப் புலமைத் திருவள்ளுவரும், அதன் பின்

"செல்வத்துட் செல்வம்
செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை."

எனக் கேள்விச் செல்வத்தை மிகுத்துக் கூறியது காண்க. மேலும்,

"கற்றில னாயினும் கேட்க
அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்ருந்
துணை" என்பர்.

செவியுணர்வே மாக்களை மக்களாக்குவது என்பது தோன்ற

"செவியிற் சுவையுணரா
வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்"

என்பதும் நோக்குக.

இங்ஙனம் சிறந்த கேள்வியறிவைப் பெறுதற்குச்; சொல்லலின்றிக் கேட்டல் நிகழாமையின் சொல்லுதல் வேண்டியதாகின்றது. இதனுல் மனிதர்க்குச் சொல்வன்மைமிக இன்றியமையாததென்பது பெறப்படுகின்றது. உரையாடல், பிரசங்கித்தல், வாதிடல், நீதியுரைத்தல், தூதுசொல்லல், கற்பித்தல் முதலாகப் பலவழிகளில் நாம் சித்திபெறச் சொல்வன்மை பயன்படுகின்றது.

எந் நிகழ்ச்சிக்கும் காலமுமிடமும் ஏற்றனவாதல் வேண்டும் என்பது யாவரும் அறிந்ததாகலின், சொல் வெற்றி பெறவும் அவை தக்கன வாதல்வேண்டுமென்பது தானே விளங்கும். இனி இலக்கணகாரர் கற்பித்தலுக்கு சொல்ல வேண்டிய பொருளை முன்னுகவே தன் உள்ளத்தில் ஆராய்ந்து அமைத்துக் கொள்ளுதல், தெய்வம் வாழ்த்தி ஆரம்பித்தல், விரையாது சொல்லல், சொல்லும்போது விருப்பத்தோடு முகம் மலர்ந்திருத்தல், கேட்போரின் உணர்வின் அளவை உணர்ந்து அதற்கேற்பச் சொல்லல் முதலியவற்றை முக்கியமாகக் குறிப்பிடுவர். திருவள்ளுவ நாயனுர் சொல்லும்போது சொற்சோர்வு உண்டாகா வண்ணம் கவனமாயிருத்தல், வழுவின்மை சுருங்குதல்—விளங்குதல்—இனிதாதல—விழுப் பயன் தருதல் என்றிவற்ருல் கேடபாரைத் தன்வசப்படுமாறு பேசல், கேட்போரின் கல்வி, ஒழுக்கம், பருவம் முதலானவற்றுக்குத் தகப்பேசுதல் எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்ற சொல்லுபயோகித்தல், முன் பேசுவனவும், பின்பேசுவனவும் மாறிமாறிக் கலவாது ஒழுங்குசெய்து பேசல்—இடைவிடாது அதிகம் பேசுதலின்மை முதலியவற்றைச் சொல்வன்மைக்கு உபகாரமாகக் கூறுவர். பழமொழி என்னும் நூலுடையார்.

"கேட்பாரை நாடிக்
கிளக்கப் படும்பொருட்கள்
வேட்கை யறிந்துரைப்பர்
வித்தகர்" என்பர்.

"விரைந்துரையார், மேன்மே
லுரையார், பொய்யாய
பரந்துரையார், பாரித்
துரையார்—ஒருங்கனைத்தும்
சில்லெழுத்தி னுனே
பொருளடங்கக் காலத்தாற்
சொல்லுக செவ்வி அறிந்து"

என்னும் ஆசாரக்கோவை

செவ்வி—தருணம்; பாரித்துரைத்தல் — விரித்துரைத்தல்.

இனி, பேசுவோனது தோற்றமும், நிலையும் பேச்சுச் சிறப்புக்கு இன்றியமையாதனவே. எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ற சொற்களை உபயோகிக்கும் போதும் அச் சொற்களின் ஒலியை எடுக்கவேண்டிய இடத்து எடுத்தும், படுக்க வேண்டிய இடத்துப்படுத்தும் நலிய வேண்டிய இடத்து நலிந்தும் கொள்ளுதல், பேசுங்கால் தன்னுள்ளத்தெழு உணர்வு தன் மெய்யில் புறப்பட்டுத் தோன்றுமாறு பேசல், அங்கசேட்டை மிகுதியுமின்மை, என்பனவும் கொள்ளத்தக்கன.

இங்ஙனம் கூறிய இயல்பெலாம் வாய்ந்து பேசக்கூடியவர். அரியர் "வார்த்தை பதினுயிரத் தொருவர்" என்பர். அங்ஙனம் பேசவல்லவரே நாவலர்.

"மயிர்வனப்பும் கண்வனப்பும்
மார்பின் வனப்பும்
உயிர்வனப்பும் காதின்
வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும்
வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு."

## ஓதுவார் பதில்

**எம். ஜெகதீசன்**
**சே. பொன்னுத்துரை**
**வி. பேரம்பலம்**
காரைநகர்.

கேள்வி: அறிஞர் ஐயா! நாம் மூவர்! மூவருக்குள்ளும் பெரும் வாக்குவாதங்கள்! நீர் சம்சாரியா? சந்நியாசியா? பிரமச்சாரியா?

பதில்: மூன்றும் இல்லை.

**மா. பொன்னம்பலம்**
கிளிநொச்சி

கேள்வி: தமிழ் அழிந்தால்...!

பதில்: யார் சொன்னவர், யார் சொல்லுகின்றவர், யார் சொல்பவர்?

**மா. சற்குணம்**
கட்டுவான்புலம்

கேள்வி: ஐயா, "மனிதரில் விலங்குகளுமுண்டு" என்பது எவ்வளவு பெரிய உண்மை?

பதில்: மட்டுமல்ல; தேவர்களும் உண்டு.

**ரா. செல்லமுத்து**
பரந்தன்

கேள்வி: தங்கள் தாய்நாடு எது?

பதில்: யாதும் ஊரே யாவரும் கேளிர்!

### ஒரு திருத்தம்

23-11-72 (ஒளி 7) கலைக் கண்ணில் இடம் பெற்ற "சோம்பேறித்தனம்" என்னும் கவிதையை இயற்றியவர், திரு. வ. யோகானந்தசிவம் என்று கொள்க.

## மதுரகவியின் குடும்பத்துக்கு

கல்வி, கலை, கலாசாரக் காப்புக் கழகச் சார்பால்

**நிதியுதவி**

மறைந்த மதுரகவி நாகராஜன் அவர்களின் குடும்பத்துக்கு நிதியுதவி புரிவதற்கான தீர்மானம் ஒன்றை, கடந்த 2-12-72ல் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றியது.

இந்நிதிக்கு அன்பளிப்பு அனுப்ப விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு 30-12-72க்கு முன்னர் அனுப்பி உதவும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்ருேம்.

நன்றி.

செயலாளர்
கல்வி, கலை, கலாசாரக் காப்புக் கழகம்
28, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக்கிழியில் இறை திருவுரு

செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளை

**உள்ளக்கிழியின் இறை திரு உரு எழுதி, இறைமயமாய் அழுந்தி, தன்னை மறந்து தலைவன் தாளைத் தலைப்படும் நாவேந்தர் பாடலைப் படிக்கவேண்டியவர் நாம்.**

### சொன்மாலை பயில் குயிலினம்:

பசுமரத் திரள்கொண்ட சோலை ஒன்றினில் இருந்து ஒரு குயில் காலைநேரம் கூவுகிறது. சற்றுத் தொலைவிலுள்ள மரங்களின் செறிவொன்றிலிருந்து அக்குரலை எதிரொலிக்கிறது பிறிதொரு குயில்: இப்புறம் சோலையொன்றினில் இருந்து கீத இசை எழுப்புகிறது இளங்குயிலொன்று. அக்காலைநேரம் குயிலிசையால் வானவெளி இசைமயமாய் கேட்போர் உளத்தைக் கவர்ந்தேவிடுகிறது. காலைநேரம் அப்பர் சுவாமிகள் 'சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்!' என்று குயிலினத்தை ஆராமையோடு விளிக்கிறார். 'சொன்மாலை பயில்கின்ற' என்ற தொடர் நல்ல தமிழினிமை வாய்ந்தது. சங்கீத விற்பன்னர் ஒருவர் இசைபாட அதனை அப்படியே அவர் சீடர்குழு பாடிப் பயிற்சி செய்தல்போல இருக்கிறதாம் ஒரு குயிலின் குரலை பல இடங்களிலுமிருந்து பல குயில்கள் ஒலித்திசைத்தல். இக்காலைக்கீத ஒலியை சொன்மாலை பயிலுதல் என்று கூறுதல் எத்துணைப் பொருத்தமுடையது! இறைவன் திருநாமத்தைக் குயிலினங்களே பயிலுகின்றன என்ற அன்புணர்ச்சி அப்பருளத்தைப் பாகாக்கிவிடுகின்றது. நமக்குத் தோற்றுத அருளுணர்ச்சி பெரியோருளத்தை ஆட்கொண்டு விடுகிறது. காலைநேர இசையெல்லாம் சேர்ந்து குயிலினங்களுக்குப் பயிற்சி அளிக்கும் உணர்வு குயிலிசையைக் கேட்போர்க்கும் ஏற்படுகிறது. இங்கே வெறும் சொல்லிசையன்றி சொன்மாலை இசை காதினை அமிழ்தென நிரப்புகிறது. இங்கே வெறும் சொல் இசையாகி, அதன்மேல் சொல் இசைமாலையாகி, ஈசன் கழுத்திற்கே நல்ல ஆரமாகிவிடுகிறது. ஏனையோர்க்கு வெறுங் கூக்குரலாகக் கேட்பது ஈண்டு சொல்லிசை மாலையாகும் மாட்சியை என்னென்பேம்!

இக்குயிலின் இன்னிசையைக் கேட்ட மணிவாசகர் 'குயிற்பிள்ளையே பெருந்தேன் ஒழுகும் பழச்சோலையிலிடையருது பயிலுவதால் உன் குரலின் இன்னிசை ஒழுக்கினால் நீ ஈசனையே வரக்கூவும் பேறுடையாய். போக பூமியாகிய வானுலகத்தைப் புறக்கணித்து மனிதர்வாழ் பக்திக்குரிய மண்ணுலகையே விரும்புகிறான் எம்மிறைவன்: இவ்வுடல்வழியே உளம் புகுந்து எங்கள் அறிவொடு கலந்த அவனை என்னிடம் வருமாறு இன்னிசை எழுப்புதி.'

"தேன்பழச் சோலை பயிலுஞ்
சிறுகுயி லேஇது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென்
உணர்வது வாய ஒருத்தன்
மான்பழித் தாண்டமெல் நோக்கி
மணாளனை நீவரக் கூவாய்"

நமக்கு இன்னமுதத்தை வாரி வழங்கும் குயில் மண்ணுலகை விண்ணுலகினும் சிறந்த பண் நிறை அன்புப் பூமியாக்குகிறது.

### பன்னப்பன்ன இன்பந் தருவது அன்னைத்தமிழ்:

குயில் அப்பனுக்குச் சூட்டும் சொன்மாலை அப்பரையே ஈசனுக்குத் தமிழ்ச்செஞ்சொன்மாலையை அடிக்கண் சேர்த்துச் செய்கிறது. அப்பர் அருள்வாக்கு;

"சிந்தை வெள்ளப் புனலாட்டிச்
செஞ்சொல் மாலை அடிச்சேர்த்தி
எந்தை பெம்மான் என்னெம்
[மான்
என்பார் பாவ நாசமே"

என்று இந்தப் பாவநாசத் திருப்பதிகத்தில் முழங்குகிறது. இத்திருப்பதிகத்தில் 8ஆம் திருப்பாடலில் செஞ்சொல் வேந்தர் அப்பர் பெருமான் "மேலை வானோர் பெருமானை விருப்பால் விழுங்கி இட்டேனே" என்கிறார். இறைவனைத் தேன் முதிர்ந்த முந்திரிப்பழமாகக் கண்டு அவனை அப்படியே விழுங்கச்செய்யும் தமிழின் அன்பின்பப் பண்பினை என்னென்று போற்றுவோம். பன்னப் பன்ன இனிமை தருவதனைத் தமிழ் அமிழ்து என்போம். அப்பர் பெருமான் முதிர்ந்த பயிற்சிவசத்தால் அப்பனைச் சிந்தைக்கோவிலில் எழுந்தருளச்செய்கிறார். அன்பால் முழுக்காட்டுகிறார். முழுகிய முழுமுதல்வனுக்குச் செஞ்சொல் மாலையைத் திருவடியிற் சூட்டிக் கந்தங்கமழச் செய்கிறார். அதன்மேல் ஆராமை மிகுதியால் "எங்களுக்குப் பெருமானாகியசுவாமீ என் னெம்மானாகிவிட்டாயே என என்புருகக் கதறுகிறார்.

### நல்ல காணிக்கை:

குறைவிலா நிறைவுடையான் இறைவன். அடியாரிடம் (அப்பரிடந்தான்) தானேதோ குறையிரப்பான் போல 'ஏதோ காணிக்கை இடும்' என்கிறான்: எல்லாமுடையான் நமக்கருளுதற்காகவே நம்மிடம் இரக்கிறான். பூவைக் காணிக்கையாகக் கொடுப்பேனோ; பெண்ணைத்தான் காணிக்கைப் பொருளாக இடுவேனோ என்று எண்ணும் அப்பர் குன்றாச் செல்வனுக்கு நாம் கொடுப்பதும் எடுக்க எடுக்கக் குறையாததாக இருக்கவேண்டுமே. குன்றாமல் என்றும் குன்று போன்ற தமிழிருக்க நாம் அத்தமிழ்மாலைகளாற் காணிக்கையிட்டால் அது நமக்குத்தானே உய்தி தந்துவிடுமே என நினைந்து

"பூம்படி மக்கலம் பொற்படி
மக்கலம் என்றிவற்றால்
ஆம்படி மக்கலம் ஆகிலும்
ஆரூர் இனிதமர்ந்தான்
தாம்படி மக்கலம் வேண்டுவ
ரேல்தமிழ் மாலைகளால்
நாம்படி மக்கலம் செய்து
தொழுதுய் மடநெஞ்சமே"

என்று காணிக்கைப் பாடலருளுகிறார்.

(படிமக்கலம் = கையுறை; காணிக்கை)

### உள்ளக்கிழியின் எழுதும் உரு:

அப்பர் சுவாமிகள் விடும் மூச்சே தமிழ். அவர் நாடி நாளம் தமிழ்மயமாகிவிட்டன;

"சலம் பூவொடு தூபம்
மறந்தறியேன்
தமிழோ டிசை பாடல்
மறந்தறியேன்"

என்று சூலை வாட்டும்போதும் தாம் தமிழ்ப்பா இசையால் இறைவனுக்கு மாலைசூட்டியமையை இயம்பி இயம்பிச் சூலைக்கொடுமையைக் கடந்தேறுகிறார். ஆண்டவன் நினைப்புத் தம்மை ஆட்கொள்ள அவனருட்டிருவருட்குணத்தைப் பலவாற்றால் நினைந்து சிந்தை நைகிறார்; அப்பர் அமரருலகு உன்னாட்சிக்குட்பட்டு இருக்கவும் அதனை வேண்டாதே திருவாரூரில் அருளாட்சி நடத்துகிறாயே. ஈராயிரம் தந்தம் உள்ள வெள்ளை யானையில் வீற்றிருக்காது அறமே வடிவான ஆனேற்றில் உவந்திருக்கிறாய். என்ன விந்தை!

"அயிராவணமேறு தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூ
ராண்ட
அயிரா வணமேஎன் னம்மா
னேநின்
அருட்கண்ணால் நோக்காதார்
அல்லா தாரே"

ஈற்றடியிலுள்ள அயிராவணம் – நுண்ணிய இயல்பு வாய்ந்த உயிருக்குயிரான கடவுள் என்பது கருத்து: இறைவனுடைய அருட்கண் நோக்கம் பெறுபவர் பயனற்றவரே. ஷிபாடலின் முதல் இரு அருமையினும் அருமை வாய்ந்த அடிகள் வருமாறு:

'உயிரா வணமிருந் துற்று
நோக்கி
உள்ளக் கிழியின் உருஎழுதி
உயிரா வணஞ்செய் திட்டுன்
கைத்தந்தால்
உணரப் படுவரோ டொட்டி
வாழ்தி"

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# இசை உலகின் தனி அரசி

தொடர் காவியம்

மட்டுவிலாம் சிற்றூரை நினைக்குங் காலை
மனஇருளை நீக்குமம்மன் கோயில் தோன்றும்
கட்டமைந்த காளையர்தம் உழைப்பைக் காட்டும்
கவின்மிகுந்த வயற்பரப்பும் அடுத்துத் தோன்றும்
சிட்டர்புகழ் வேற்பிள்ளை எனும்சான் றோன்போல்
சீர்விளங்கும் சான்றோரின் நினைப்புத் தோன்றும்
எட்டுணையும் வஞ்சமின்றி ஊரில் வாழும்
இன்முகங்கொள் நல்லோரின நினைப்புத் தோன்றும்.

இயற்கைவளம் பிறவளங்கள் அனைத்தும் சேர
எழில் வீசிக் கொண்டிருக்கும் சிற்றூரின்கண்
வயற்புறத்தைக் காவல்செய்யும் ஒருவன் வாழ்ந்தான்
வஞ்சமிலா நெஞ்சுடையான் அவனை யாரும்
நயத்துடனே "அப்பையா" என்று சொல்வார்
நாணயத்துக் கொருமனிதன் என்றும் குன்று
முயற்சியினால் உயிர்வாழ்வோன் அவன் பெற்றிட்ட
முழுமதியோ 'சுமதி"யெனும் எழிற்பேர் கொண்டாள்.

மாங்குயிலின் தீங்குரலோ? குழலோ? யாழோ?
மலர்கள்தரும் நறுந்தேனோ? அமுதோ? பாகோ?
தீங்கனியின் சுவைதானோ? யாதோ? என்றே
செப்புதற்கோர் சொல்லின்றித் தவிக்கச் செய்யும்
பாங்கமைந்த குரலுடையாள், வயலி னூடே
பாடியவா றேநடந்தாள் அசைந்தே ஆடும்
பூங்குழலோ கால்கள்வரை நீண்டே அந்தப்
பொற்றொடியின் வனப்பினிற்கோர் சாட்சி கூறும்.

மின்னலெனும் இடையுடையாள் கலைஞர் யாரும்
விரும்புகின்ற எழிலுடையாள் இனிமை வாய்ந்த
கன்னலெனும் மொழியுடையாள் நாவா லன்றிக்
கயலிரண்டால் கவிபடைக்கும் அழகுப் பாவை
பொன்னுலகம் உள்ளதென்னும் உண்மை தன்னைப்
புவித்தலத்தோர்க் குரைக்கவந்த தேவ மாது
செந்நெலெலாம் வளர்ந்திருக்கும் வயலி னூடே
செல்கின்றாள் செல்கின்றாள் வாழ்க அன்னாள்.

இயற்கைவளம் நிறைந்திட்ட வயலி னூடே
இன்னுமொரு தனிஎழிலாய்க் கன்னி செல்ல
வயற்கரையில் நின்றோர்கள் கண்கள் எல்லாம்
மங்கைநடந் திடும்அழகில் நிலைத்தே நிற்ப
அயற்புறத்தை நோக்காளாய் அவள்செல் கின்றாள்
ஆயிரமா யிரம்கனவைக் காண்போர்க் காக்கும்
நயத்தையெலாம் கொண்டிருக்கும் இளமை கொண்டாள்
நல்லுலகை மறந்தவளாய்ப் பாடிச் சென்றாள்.

எழிலுடையாள் எழிலுடையாள் என்ப தன்றி
எங்கேயவ் வெழிலெனவும் இயம்பல் ஆமோ
விழிதனிலோ? நெற்றியிலோ? புருவ மீதோ?
வியப்பூட்டும் தனத்திடையோ? தோளில் தானோ?
ஒளியமைந்த பற்களிலோ? இதழின் மீதோ?
உவப்பூட்டும் இடையினிலோ? நடையில் தானோ?
எழிலுடையாள் எனப்பகுத்துக் கூறற் கில்லை
எவ்விடமும் எழில் விளங்கும் யாக்கை கொண்டாள்.

பருவமொரு வனப்பளிக்கக் குடும்பம் தந்த
பண்பவட்கோர் அழகளிக்கக் குறையே இல்லா
உருவமொரு கவின்வழங்க வல்லோன் செய்த
ஓவியம்போல் அவள்திகழ்ந்தாள் இந்நாள் மட்டும்
ஒருதுயரும் அவள்காணாள் தாயின் கையில்
உவந்திருக்கும் சேயெனவே மகிழ்வே கண்டாள்
வருவவெலாம் நல்லனவே என்றே எண்ணி
வாழ்கின்ற கற்பனைகொள் இளமை கொண்டாள்.

நீரூட்டி நெல்விளைத்தும் செம்மை வாய்ந்த
நிறமலரால் எழில்விளைத்தும் வயலின் கண்ணே
ஊரார்க்குப் பயன்விளைக்கும் குளத்தைக் கண்டாள்
உளம்மகிழ நகைதிகழக் குளத்தில் பாய்ந்தாள்
சீரான தாமரையும் அவள்மு கத்தின்
திருமுன்னே நிலைகுலைந்தே அசைதல் கண்டாள்
பேரார்வங் கொண்டவளாய்ப் புட்கள் யாவும்
பெண்ணவளை வாழ்த்திடநீ ராடலானாள்.

மங்கையவட் கியற்கையெழில் இருந்த தேனும்
மலர்திகழும் குளத்தினில்நீ ராடும் காலை
அங்கமெலாம் புதுப்பொலிவால் சிறப்ப வானில்
ஆதவனோ நின்றதனை ரசிக்க லானான்
தங்கநிகர் மேனியினைத் தழுவும் பேற்றைத்
தாமடைந்த காரணத்தால் அலைகள் துள்ளும்
செங்கனிநேர் வாயினிலே முத்தம் தோன்றல்
செகத்தினிலே புதுமையெனப் புட்கள் நோக்கும்.

இருகுடத்தை நிதமேந்தும் எழில்போ தாதென்
றின்னுமொரு குடமெடுத்தும் அதில்நீர் கொண்டும்
உருவறியாச் சிற்றிடையை வருத்திக் கொண்டும்
ஒண்டொடியாள் வயலிடையே வரம்பிற் சென்றாள்
வருவதொரு ரதம்தானோ மலர்கள் சேர்ந்தே
மண்ணிடையே கொண்டபுது வடிவோ? என்றே
தெரியாராய் அவ்வூரார் திகைத்துப் பின்னர்
தெரிந்ததுவும் சுகம்கேட்டும் மகிழ்ந்தும் செல்வார்.

— வளரும்

புலவர் ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பிற் சிறந்த பொற்புடை மகளிர்

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

கற்புடைத் தலைவியர் பலரின் சிறப்புக்களையும் கற்பு என்ற சொல்லின் விளக்கத்தையும் இக் கட்டுரையிற் காணலாம்.

### அந்தணர் கூற்று

அடுக்கடுக்காக இடுக்கண் ணுறினும் உள்ளத்தை மாறு படுத்தாது ஒரேபடியிருத்தலே யும் கற்புநிலை என்றே கூற லாம். வெயிலாலோ, மழை யாலோ கல்லிலே மாற்றம் காண முடியாது. அதே போன்று இல்லக்கிழத்தியின் உள்ளமானது கணவன் மாட் டுக் கொண்ட அன்புநிலையிற் றிரியாது ஒருபடித்தாகவே யிருக்கும்: அந்தத் திண்மை எத்துணைத் துன்பத்தையும் தாங்கவல்லது.

''கற்றாண் பிளந்திறுவ தல்லாற் பெரும் பாரந் தாங்கிற் றளர்ந்து வளை யுமோ'' என்பது நீதிப் பாடல்: தாங்க முடியாத துன்பம் வந்துவிட்டால் வளைந்து கொடுக்காது அக் கற்பு. அளவுக்கு மிஞ்சினல் உயிர் கொடுத்துப் புகழ் கொள்ளும் தன்மையது அதுவே. இதனல் கல்லின் தன்மைக்கு ஏற்ப கற்புஎனும் பெயரை உணர்த்துகிறது என்றும் கூறலாம். திருமண வீடுகளில் அம்மியாகிய கல் லிலே மணப்பெண்ணை யேற்றுவதும் இதனையே ஞாபக மூட்டுகிறது. கற் புடையவளாகக்கல்லைப்போல் இருந்துகொள் என்பதும்; கற்பிற் தவறினல் அகலி கையைப் போற் கல்லாவாய் என்பதும் அம்மி மிதித்தலின் தத்துவமாகும்.

கற்புள்ள பெண்ணுக்குக் கணவனே தெய்வம். இதனை வலியுறுத்துவதே ''தெய்வந் தொழாஅள் கொழுநற் தொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை'' என்னும் குறட் பா. இதற்கு உரை விளக்கம் கூறிய பரிமேழலகர் ''கணவனைத் தெய்வமாகக் கருதி வாழ்வு நடத்தும்பெண் ணுக்கு இயற்கையே ஏவல் செய்ய முன்னிற்கும் எனக் கூறுகிருர். இறைவனைக் கணவனகக் கருதல் பக்தி நிலை. கணவனை இறைவனகக் கருதல் கற்புநிலை.

"காண்டகைய தன் கணவரைக்
கடவுளார் போல்
வேண்டலுறு கற்பினர்தம்
மெய்யுரையில் நிற்கும்
ஈண்டையுள தெய்வதமும்
மாமுகிலும் என்ருல்
ஆண்டகைமை யோர்களு
மவர்க்கு நிகரன்றே"
— கந்தப்புராணம்

### எரியூட்டல் :

கண்ணகியின் ஏவலை அக் கினி மேற்கொண்ட தன்மை யையே சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். ''தீதிலா வட மீனின் திறமிவள் திறமென் றும்'' எனவும், "கற்புக்கடம் பூண்ட இத்தெய்வமல்லது பொற்புடைத்தெய்வம் யாங் கண்டிலமால்'' என்றும் போற்றப்படுகிருள் கண்ணகி.

"வானம் பொய்யாது
வளம்பிழைப்பு அறியாது
நீள்நிலவேந்தர் கொற்றம்
சிதையாது
பத்தினிப் பெண்டிர்
இருந்த நாடு."

கலைப்பிரியனுய் மாதவி மாட்டு மயங்கிக் கோவலன் பிரிந்திருந்த காலத்திலே அவள்கொண்ட சோக நிலையை,

"அஞ்செஞ் சிறடி
அணிசிலம் பொழிய
மெனதுகி லல்குல்
மேகலை நீங்க
கொங்கை முன்றிற்
குங்கும மெழுதாள்
மங்கல வணியிற்
பிறிதணி மகிழாள்."

என்னும் சிலப்பதிகார அடி கள் காட்டுகின்றன. சிலம்பு ஒழிந்த மற்றைய ஆபரணங் கள் யாவும் கோவலனுக் குக் கொடுத்துக் கொடுத்துத் தொலைத்துவிட்டாள்: சிலம்பு மாத்திரம் இருந்தது. அதனையுமே கோவலன் பிரிந் திருந்த காலத்தில் அவள் அணியவில்லை. கணவனைப் போன்று மதிக்க வேண்டிய மங்கலவணியாகிய தாலியை மாத்திரம் அவள் அணிந் திருந்தாள். சத்தியத்தின் பொருட்டு பதி இழந்து, பாலனை இழந்து, நிதிஇழந்து நின்ற சந்திரமதி தன் கழுத் தில் மங்கலவணி விளங்கியது என்று அறிகிறோம். இந்த மங்கலவணியின் தூய்மை யைத் தமிழ் மகளிர் சிந்திக் கக் கடவர்.

### மங்கை மாதர் பெருங்கற்பு:

திட்டியின் விடமன்ன கற்பின் செவ்வியென்று சீதையைக் கும்பகர்ணன் வாயிலாகப் பாராட்டுகிருர் கம்பர். சீரிய கற்பினை யுடையவள் சீதாபிராட்டி. இராமனல் சிறை மீட்கப் பட்டு அக்கினியில் குளித்த தன்மைமை,

"பாய்ந்தனள் பாய்தலும்
பாலின் பஞ்செனத்
தீந்ததவ் வெரிஅவள்
கற்பின் தீயினல்"

என்ற அடிகள் குறிப்பிடு கின்றன. தீக்குளித்தபோது அக்கினிதேவன் இராமனை நோக்கி அக்கினியாகிய என் னையே இவ்வன்னையின் கற்பா கிய நெருப்பு எரித்து வெதுப் புகிறது. அவள் கற்பின் வெம் மைக்கு நாணுற்றமாட்டேன் எனக் கூறினன். பிராட்டி யின் தூயகற்பினைக் கண்ணுரக் கண்ட அனுமன்,

''இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை யென்ப
தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்''.

எனக் கூறி உவகை கொள் கிருன். அரக்கர் தானும் போற்றிக் கொண்டாடிய கற்பு அன்னையின் கற்பு. விபீ டணன் கூற்ருக அமைந்த,

''கோநகர் முழுவதும்
நினது கொற்றமும்
சானகி யெனும்பெயர்
உலகின் தம்மனை
யானவள் கற்பினல்
வெந்த தல்லதோர்
வானரஞ் சுட்டதென்
றுணர்தல் மாட்சியோ''.

''பாடலையும் காந்தையருக் கணியனைய சானகியர்பேரழ கும் அவர்தம்கற்பும்'' என்று கூறும் மண்டோதரியின் கூற் றினையும் நோக்குக. அரக்கர் கோன் மனைவியாகிய மண் டோதரியும் அசுரர்கோன் மனைவியாகிய பதுமகோபலை யும் கற்புள்ள பெண்கள் வரி சையில் இடம் பெறுகின் றனர். போர்க்களத்தில் இறந்து கிடந்த தன் கண வனைச் சென்று அடைந்து அவன்மேல் விழுந்து அழுது புலம்பி உடன் உயிர் விடு கின்ருள் மண்டோதரி (பூதப் பாண்டியன் மனைவி). கணவன் மாண்டுவிட்டான் என்பதைக் கேட்டவுடனேயே உயிர்விடு கிருள் சூரபன்மன் மனைவி பதுமகோபலை ''கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில் லென்று இணையடிதொழுது வீழ்ந்த'' கோப்பெருந்தேவி யின் தலையாய கற்பும் போற்றுதற்குரியது.

இன்னும் சாத்தனுராற் போற்றப்படும் ஆதிரை என் னும் கற்புத் தொய்வத்தை யும் நாம் மறக்கமுடியாது. வட்டினும் சூதினும் வான் பொருள் இழந்து கெட்டலைந் தவன் சாதுவன்; இழந்த பொருளை மீட்டுவதற்கு அயல் நாடு சென்றவன் பலகால மாக மீளவில்லை. சாதுவன் சென்ற கப்பல் நீருள் மூழ்கி விட்டது என்ற வதந்தி ஆதி ரையின் காதிற்படுகிறது; பொங்கி எழுந்தாள். கணவன் சென்ற வழியே செல்வேன் என்று துணிந்தாள்; சுடு காட்டை நாடிக் குழி தோண்டித் தீ மூட்டினுள்: தீயுட் பாய்ந்தாள். தீ சுட மறுத்தது. ஆதிரையே! நின் கணவன் இறக்கவில்லையென அசரீரி முழங்கிற்று. அதே போல் மீண்டும் வந்தான் சாதுவன். திருந்திய நிலையில் மனையாளைச்சரணடைந்தான். சாதுவனை நல்லானுக்கியது ஆதிரையின் கற்புத் திண் மையே.

சபரி, ஆதிமந்தி வரலா றும், கற்பரசி கண்ணகி, மண் டோதரி, திரௌபதை முதலி யோர் செய்திகளும் கற்பெ னுந் திண்மையினல் அடைந்த முதன்மைப்பேற்றைக் காட்டு வன;

கணவனைப் போற்றிக் கடமையைச் செய்யப் பெற் ருல் மகளிர் பெரிய சிறப்பை யுடைய மேலுலகைப் பெறு வர் என்ற பொருளை வலி யுறுத்துவது.

''பெற்ருற் பெறிற்பெறுவர்
பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு''

என்னும் குறட்பாவாகும்.



நவம்பர் 'கலைக்கண்'ணில் உங்களைக் கண்டுகொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்பெற்ற படம் தேசத் தலைவர் சேர் பொன். இராமநாதனுடையது.

## இலக்கியத்தின் நோக்கம்

இலக்கியத்தின் நோக்கம் வாழ்க்கையை அழகு படுத் துவது என்று சிலர் கூறுகின் ருர்கள். இலக்கியம் எந்தவித நோக்கத்துக்குமாக இல்லா மல் வெறும் இன்பத்துக்கா கவே இருக்கவேண்டும் என்று சிலர் கூறுகிருர்கள்.

இந்த இரு பிரிவினரை யும் கலை கருத்துக்காக என்று கூறுபவர்கள் என்றும், கலை கலைக்காகவே என்று கூறுப வர்கள்என்றும் கூறுகிருர்கள்.

கலை கலைக்காகவே என்ற கட்சியினர் ஒருபக்கம் இருப்ப கலை கருத்துக்காக என்று கூறுபவர்களிலும் பல பிரிவி னர் இருக்கிருர்கள். மரபு வழிபாகப் பேணப்பட்டு வரும் கருத்துக்களையே இலக் கியம் கூறவேண்டும் என்று சிலரும் இக்கால நிகழ்ச்சிகளை யும் புதுமைகளையும் இலக்கி யம் கூறவேண்டுமென்று சில ரும் கூறுகிருர்கள்.

இலக்கியத்தின் நோக்கத் தைப் பொறுத்த வரையில் அதாவது இலக்கியத்தின் கருத்தைப் பொறுத்தவரை தில் ஒரே முடிபு இல்லாதிருப் பதுபோலவேஇலக்கியத்தின் உருவத்திலும் வேறுபட்ட முடிபுகள் இருக்கின்றன.

இலக்கியம் உயர்ந்த நடை யிலேயே இருக்கவேண்டும் என்று சிலரும் காலத்துக் கேற்பப் பேச்சு வழக்கில் உள்ள சொற்களையும் ஏற் றுக்கொள்ளும் நடையிலே இருக்கவேண்டும் என்று சில ரும் கூறுகிருர்கள்.

ஒன்றை இலக்கியம் என்று ஏற்றுக்கொள்ளும்போது படைப்பாளியின் நம்பிக்கை இன்னதென்ருே மதம் இன்ன தென்ருே ஆராயாமல், படைப்பாளி தனது நம்பிக் கையை எவ்வாறு சொன்னுன் என்றே ஆராய வேண்டும் என்று கூறப்படுகிறது.

—"வாய்மையன்"

## அறிந்ததும் அறியாததும்

### இதோபதேசம் :

உன்னைப்பற்றி நீயே புகழ்ந்து பேசிக்கொள்ளாதே. பிறர் உன்னைப்பற்றிப் புகழ்ந்து பேசும்போதும் தற்புகழ்ச்சி யாக எண்ணிக்கொள்ளாதே.

### பொறுமை கடைப்பிடி :

ஒருநாள், சிலநாட்கள், பலநாட்கள் மட்டுமல்ல; உனது வாழ்க்கை முழுமையும் பொறுத்துக்கொள். அவ்வண்ணம் நீ தொடர்ந்து கடைப்பிடித்தால், நீ எதிர்பார்த்ததிலும் மிகப் பெரிய வெற்றியை அடைந்துகொள்வாய்.

### பழிக்குப் பழி :

ஒருவனுக்குரிய பொருமை ஒருபோதும் பொறுமை யாக இருக்காது. என்ருே ஒருநாள் அது அவனையே ஒழித்துக் கட்டிவிடும்.

### தெரிந்துகொள்!

மற்றவரை ஒழுக்கமுள்ளவர்களாகக் கொண்டுவர முயற்சிப்பவர் தாம் ஒழுக்கமுள்ளவர்தாமா என்பதை முதலிலே தெரிந்துகொள்ளட்டும்.

### மூன்று கடமைகள் :

காக்கவேண்டியது ஒன்று! அது நா.
அடக்கவேண்டியது ஒன்று! அது மனம்.
செய்யவேண்டியது ஒன்று! அது நன்மை.

### காதற்பண்பு :

காதல் இருவகைப்படும். ஒன்று உயிர்க்காதல். மற் ருென்று உடற்காதல். உடற்காதலில் வெறும் இன்ப துன்பச் சலனங்கள் கலந்திருக்கும். உயிர்க்காதலில் உண்மை அமைதி அடங்கியிருக்கும்.

### இவர்தாம் அவர் :

மூடரின் பேச்சைக்கேட்டு முழுப் புத்திசாலிகள் ஒரு போதும் பின்தொடர மாட்டார்கள். அப்படித் தொடர்ந் தால் அவர்கள் முழு மூடர்களாக இருப்பார்கள்.

### நான் யார்?

உனக்குரிய ஆற்றலும், வலிமையும், முயற்சியும் உன்னுடையதுதான் என்று நீ உணரும்போதுதான் நீ ஒரு இலட்சியவாதியாகின்ருய்.

—"மெய்யன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பகுதி

"யோகா"

* "ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!".

இது பாரதியின் கருத்து. ஆமாம்! உள்ளத்தின் விரிவு நிலைக்கும், உடலின் வலிமைக்கும் மிக மிகத் தேவையானது விளையாட்டுத் துறை என்பதை அவர் நன்கு உணர்த்தியுள்ளார்

## விளையாட்டுவீரர் அறிமுகம்

### பட்டணம்

**N. எதிர்வீரசிங்கம்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட N. எதிர்வீரசிங்கம் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். இளம் வயதிலிருந்தே பல மெய்வல்லுநர் போட்டிகளிலும், கிரிக்கெட் போட்டிகளிலும் பங்கு பற்றி சிறந்த விளையாட்டு வீரர் என்ற பெயரைத் தட்டிக் கொண்டார். உயரப் பாய்தலில் மிகவும் சிறந்து விளங்கிய இவர், யாழ்ப்பாணத்திலும், இலங்கையிலும் புதிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். இலங்கைக் கோஷ்டியில் அங்கம் வகித்து, கெல்சிங்கியில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளிலும், மன்னில்லாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு பற்றியுள்ளார். ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் உயரப்பாய்தலில் முதலிடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தைப் பெற்றதோடு ஓர் புதிய சாதனையையும் நிலைநாட்டியுள்ளார். இப் புதிய சாதனையை நிலைநாட்டி ஊர் திரும்பிய அதே வருடம் இலங்கை மக்களால் 'சிறந்த விளையாட்டு வீரர்' என்ற அந்த ஆண்டிற்குரிய பட்டத்தைப் பத்திரிகை ஸ்தாபனத்தார் சார்பாக இவருக்கு வழங்கினார்கள். தற்சமயம் அமெரிக்காவிலே மணம் புரிந்து குடித்தனம் நடத்தும் இவருக்கு நல்லாசி கூறி இவர் திரும்பவும் நம் ஈழநாட்டிற்கு வந்து அவர் விளையாட்டுத் துறையில் கற்றறிந்த புதிய முறைகளையும், அனுபவத்தையும் நம் இளம் சமுதாயத்திற்குக் கற்றுக் கொடுப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

### கிராமம்

**N. அப்பையா**

வலிகாமம் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட N. அப்பையா மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் இளம் வயதிலேயே சிறந்த உதைபந்தாட்ட வீரராக விளங்கிப் பின்பு யாழ்ப்பாணத் தெரிவுக் கோஷ்டியிலும் அங்கம் வகித்தார். இவரது விளையாட்டுத் திறனை அறிந்த இலங்கைத் தேசிய உதைபந்தாட்டப் பழக்குநர் அல்பேர்ட் பர்ஞந்து இவரை ரட்ணம் கோஷ்டியில் அங்கத்தவராகச் சேர்த்து அக் கோஷ்டியிலும் விளையாட வைத்தார். தற்பொழுது இலங்கை வந்து திரும்பிய டைனமோஸ் (ருஷியா) கோஷ்டியுடன் விளையாடிய இலங்கைத் தலைவர் கோஷ்டியிலும், இலங்கைக் கோஷ்டியிலும் இவர் அங்கம் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு மிகச் சிறந்த எதிர் காலம் உதைபந்தாட்டத் துறையில் உள்ளது என்பது யாராலும் மறக்க முடியாத உண்மையாகும்.

கல்வி, கலை, கலாசாரக் காப்புக் கழகம் நடத்தும்

**வீரமாமுனிவர் விழாவின் மலர்**

விரைவில் வெளிவருகிறது

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னர், வவுனியா

## விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணப் பாடசாலைகள் சங்கத்தால் நடாத்தப்பட்ட 2ம், 3ம் பிரிவிற்கான உதைபந்தாட்டப் போட்டி இறுதி ஆட்டங்களில் முறையே மகாஜன, யூனியன் கல்லூரிகள் வெற்றி பெற்றுள்ளன:

2ம் பிரிவில் மகாஜனக் கல்லூரி, நெல்லியடி மகா வித்தியாலயத்தை 2—0 கோல்களால் வெற்றிபெற்றது. இதில் V. ரவீந்திரன், A. அருள் ஜோதிஞசிங்கம் இருவரும் முறையே ஒவ்வொரு கோல் போட்டனர். இப்போட்டிக்குத் திரு. V. கணேசலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

* * *

3ம் பிரிவில் யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரியை 4—0 கோல்களால் வெற்றி பெற்றது. இந்த 4 கோல்களில் S. ரவீந்திரன், தொடர்ந்து 3 கோல்களையும், T. ராகவன் ஒரு கோலையும் முறையே போட்டனர். இப்போட்டிக்குத் திரு. T. மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார்.

* * *

வடமாகாணக் கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கும், மற்றும் கழகங்களின் அங்கத்தவர்களுக்கும் இம் மாதத்தில் பயிற்சி வகுப்புகள் நடாத்த வேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றது.

* * *

சம்பத்திரிசியார் கல்லூரிக்கும், வை. எம். சி. ஏ.க்கும் மிடையில் நடைபெற்ற கூடைப்பந்தாட்ட ஆட்டத்தில் சம்பத்திரிசியார் கல்லூரி 57—21 புள்ளிகளால் வெற்றியீட்டியுள்ளது. இதில் சித்திரஞ்சன் 20 புள்ளிகளும், M. A. யோசப் 14 புள்ளிகளும், E. D. கருணுகரம் 14 புள்ளிகளும், சம்பத்திரிசியார் கல்லூரிக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

* * *

நவாலி சென். பீற்றர்ஸ் கழகத்திற்கும், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் கழகத்திற்கு மிடையில் நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் நவாலிக் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றியீட்டியுள்ளது.

* * *

திருகோணமலை வை. எம். சி. ஏ. கழகத்தினரால் நடாத்தப்பட்ட கரம் போட்டியில் 'சபைர்' கோஷ்டி சாம்பியன்களாக வந்துள்ளது. இப் போட்டியில் நாலு கோஷ்டிகள் பங்கு பற்றின.

* * *

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு மிடையில் பண்டத்தரிப்பில் நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி 4—0 கோல்களால் வெற்றிபெற்றது.

* * *

உதவி பொலிஸ் அதிபர் R. R. ஸ்கொட் யாழ்ப்[illegible]ணம் II, யாழ்ப்பாண ஹொக்கிச் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக திரு. K. அரியராஜாவும், பொருளாளராக E. K. குமரையாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

* * *

திருகோணமலை உதைபந்தாட்டச் சங்கத்தால் நடாத்தப்பட்ட IIம் IIIம் பிரிவுக்கான சம்பியன் போட்டிகளில் முறையே திருகோணமலை இளைஞர் கழகமும், கடற்படை யூனிபாரமற்ற தொழிலாளர் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றன. பரிசில்களை புகையிரதப்பகுதி திருகோணமலை பொறியிலாளர் திரு. பஞ்சாசரவேலு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வழங்கினர்.

* * *

வவுனியாக் காரியாதிகாரி பிரிவுக்கும், செட்டிகுளம் காரியாதிகாரி பிரிவுக்குமிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் வவுனியா வெற்றிபெற்றுள்ளது. இப்போட்டி விளையாட்டு அமைச்சினுல் ஏற்பாடு செய்யப்பட்டது. வவுனியா மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. கந்தையா சகல ஏற்பாடுகளையும் செய்தார்.

* * *

திருகோணமலையிலிருந்து சன்றைஸ், ஒலிம்பிக்ஸ், சென். அந்தனிஸ் கழகங்களும், வேறு சில கழகங்களும் இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தால் நடாத்தப்படும் போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

* * *

யங் ஹேயல் விளையாட்டுக் கழகம், காங்கேசன்துறை ஒரு உதைபந்தாட்டப் போட்டியை நடாத்திவருகின்றது. இப்போட்டியில் பல கழகங்கள் பங்குபற்றுகின்றன. ஆட்டங்கள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

* * *

மயிலிட்டி ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் 7 பேர் கொண்ட கோஷ்டி உதைபந்தாட்டப் போட்டியை நடாத்தி வருகின்றது. இப் போட்டி முடியும் கட்டத்தை நெருங்கியுள்ளது.

* * *

யாழ்ப்பாணக் கிரிக்கெட் கழகக் கோஷ்டியொன்று கொழும்பிலுள்ள தமிழ் யூனியனுடன் சிநேக பூர்வமான போட்டியில் பங்கு பற்ற வெகு விரைவில் கொழும்புக்குச்செல்லுமென அறியத்தருகிறோம்.

* * *

சம்பத்திரிசியார் கல்லூரிச் சிறிய மாணவர்கள் இரு கோஷ்டிகளாகப் பிரிந்து சன்ரோஸ், மன்செஸ்டர், யுனைட்டெட் என்ற பேர்களைக் கொண்டு ஓர் சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றினர்கள். இதில் சன்ரோஸ் கழகம் 7—0 கோல்களால் வெற்றி பெற்றது. சன்ரோஸ் கழகத்தைச் சேர்ந்த செல்வாவும், பிருட்மனும், மன்செஸ்டர் கழகத்தைச் சேர்ந்த ரவியும், [illegible]சனும் நன்ருக விளையாடினர்கள்.

## விளையாட்டுக் கழகம் அறிமுகம்

### பட்டணம்

**இறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம்**

யாழ்ப்பாணம் சென். மேரீஸ் பெரிய தேவாலயத்துக்கு அருகாமையில் இக் கழகம் உள்ளது. இக்கழகத்தில் கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மெய்வல்லுனர் ஆட்டங்கள், கரம், பாட்மின்டன் போன்ற ஏனைய விளையாட்டுக்களும் இடம் பெறுகின்றன. இக் கழகத்தில் பல சிறந்த விளையாட்டு வீரர்கள் உள்ளனர். யாழ்ப்பாணக் கோஷ்டியில் உதைபந்தாட்டத்தில் அங்கம் வகித்தவர்கள் பின் வருவோராவர். A. தேவராஜா, M. D. தம்பிராஜா, G. போல், M. தேவதாஸ், அன்ரன் சந்திரசேகரா. அன்ரன் சந்திரசேகரா இலங்கை வாலிபர் கோஷ்டியுடன் பாங்கொக், இந்தியா முதலிய நாடுகளுக்குச் சென்று, உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். இவரைவிட M.D. தம்பிராஜா, உதைபந்தாட்டம், கிரிக்கெட், ஹொக்கி, றக்கர் போன்ற ஏனைய விளையாட்டுக்களிலும் மிகவும் திறம்பட விளையாடியதுடன், பல வெளிநாட்டுக் கோஷ்டிகளுடனும், இலங்கையிலும், இந்தியாவிலும், பக்கிஸ்தானிலும் நடந்த கிரிக்கெட், உதைபந்தாட்டம் போன்ற போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளார். மெய்வல்லுநர் போட்டிகளில் A. சில்வஸ்ரார், L. ஜெயராஜா ஆகியோர் பல பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

இக்கழகம் தற்சமயம் M.D. தம்பிராஜாவின் தலைமையின் கீழ் இயங்கிவருகிறது. இக் கழகத்தில் பல இளம் வாலிபர்கள் அங்கம் வகிக்கின்றனர். இக்கழகத்திற்கு நல்ல எதிர்காலம் உண்டு.

### கிராமம்

**புனித மிக்கேல் விளையாட்டுக் கழகம்**

திரு. V. ஜெகநாதன் தலைமையில் உரும்பராயில் இக் கழகம் இயங்கி வருகின்றது. இக்கழகத்தில் பல அங்கத்தவர்கள் உள்ளனர். கோப்பாய் காரியாதிகாரி பிரிவால் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டியில் முதன் முறை பங்குபற்றிய இக்கழகம் முதற் தடவையிலேயே வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. இதைவிட உதைபந்தாட்டப் போட்டியிலும் வெற்றிபெற்று முன்னேறித் தற்பொழுது இறுதி ஆட்டத்தில் பங்குபற்றவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. இக் கழகத்திலுள்ள 'பி' பிரிவு விளையாட்டுக் கோஷ்டி சில சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது.

'ஏ' குறூப் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குத் திரு. ஆ. மதுரநாயகமும், 'பி' பிரிவு கோஷ்டிக்குத் திரு. அ. பாஸ்கரராசாவும் தலைமை வகிக்கின்றனர்.

இக்கழகத்தின் முன்னேற்றத்திற்கு திரு. ஆ. மரியதாஸ் (செயலாளர்) அதிக அக்கறையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் அயராது உழைத்து வருகின்ருர்.

மட்டக்களப்பில் கூடைப்பந்தாட்டத்திற்கு அதிக கவனம் செலுத்தப்படுகிறது. தற்பொழுது மட்டக்களப்பு கூடைப்பந்தாட்ட வீரர்கள் துரிதமாகப் பயிற்சிபெற்று வருகிருர்கள்.

* * *

யாழ்ப்பாணப் பொலீஸ் கோஷ்டிக்கும், வை. எம். சி. எ. க்கு மிடையில் நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டி 2—2 கோல்கள் போடப்பட்டுச் சரிசமமாக முடிந்தது.

* * *

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தால் நடாத்தப்படும் 'கப்' போட்டியில் குருநகர் பாடுமீன் கழகம், கம்பளை யுனைடெட் கழகத்தை 4—2 கோல்களால் வெற்றிபெற்றது. சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்குத் திரு. E. K. குமரையா மத்தியஸ்தம் வகித்தார்.

* * *

யாழ்ப்பாணத் தெரிவு ஹொக்கி கோஷ்டிக்கும், இலங்கைத் தெரிவு ஹொக்கிக் கோஷ்டிக்குமிடையில் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற சிநேக பூர்வமான ஆட்டத்தில் இலங்கைக் கோஷ்டி வெகு பிரமாதமாக விளையாடி 6—0 கோல்களால் யாழ். தெரிவு கோஷ்டியை வென்றது.

யாழ். தெரிவு கோஷ்டிக்கும், கொழும்புத் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற ஹொக்கி ஆட்டத்தில் கொழும்புத் தெரிவுக் கோஷ்டி 3—1 கோல்களால் வெற்றி பெற்றது.

**'கலைக்கண்'**

மாதப் பத்திரிகை

இதனை ஊக்குவிப்பது உங்கள் கடமையாகும்

தனிப்பிரதி சதம் 25

ஆண்டுச் சந்தா — ரூபா 4-00
ஆறுமாத சந்தா — ரூபா 2-25 } தபாற்செலவு உட்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வீரர் அறிமுகம்

### கிறெளதர்

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் பல விளையாட்டுக்களிலும் பங்குபற்றிச் சிறந்த பல துறை விளையாட்டு வீரராக விளங்கிய திரு. கிறெளதர் தற்பொழுது இலங்கை ஆகாய விமானப்படையில் பதவி வகிக்கின்றார். ஆகாயவிமானப் படையிலும், பல துறை விளையாட்டுக்களிலும் பங்குபற்றுகின்றார். இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டி, இலங்கைக் கூடைப்பந்தாட்டக் கோஷ்டி இவ்விரண்டிலும் அங்கம் வகித்துப் பிற நாடுகளுக்கும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றச் சென்றுள்ள இவருக்குச் சிறந்த எதிர்காலமுண்டு என்பதை எவராலும் மறுக்க முடியாது.

## உலக விளையாட்டு வீரர் அறிமுகம்

### பீலி

பீலி பிறேசில் நாட்டைச் சேர்ந்தவர். இவர் உதைபந்தாட்டத் துறையில் பல சாதனைகள் புரிந்துள்ளார். 1000 கோல்களை அகில உலகப் போட்டிகளில் போட்டுப் பெரும் சாதனை புரிந்துள்ளார். பிறேசில் நாட்டில் ஓர் அரசனுக்குரிய மதிப்பு திரு. பீலிக்கு உண்டு. இவரை பிறேசில் நாட்டின் கறுத்த வைரம் என அழைப்பார்கள். இம்முறை நடந்த உலக உதைபந்தாட்ட 'றிமற்' கேடயத்திற்கான போட்டியில் பிறேசில் வெற்றிபெற்று அக்கேடயத்தை மூன்று முறைகள் எடுத்ததன் பேரில் தங்களுடைய சொந்தமாக்கிக் கொண்டார்கள். இக்கோஷ்டியில் திரு. பீலி மிகவும் திறம்பட விளையாடித் தனது கோஷ்டிக்கும், நாட்டிற்கும் புகழைத் தேடித் தந்துள்ளார். இவர் தற்பொழுது தனது கழகமாகிய 'சன்ரோஸ்' சிறகு மட்டுமே போட்டிகளில் விளையாடுகிறார். உலக ரீதிப் போட்டிகளிலிருந்து விளையாடாது இளைப்பாறியுள்ளார். உலகத்தில் இவர் புகழ் கேட்டறியாத நாடே கிடையாது.

# இலங்கை விளையாட்டுச் செய்திகள்

இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், ருஷியா டைனமோஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற இரண்டு பரீட்சைப் போட்டிகளிலும், இலங்கைக் கோஷ்டி தோல்வியடைந்துள்ளது.

* * *

அடஸ்றியன்ஸ் கிரிக்கெட் கோஷ்டி இலங்கை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்படும் 'டெய்லிநியூஸ்' கேடயத்திற்கான போட்டியில் விளையாடி முடித்த ஐந்து ஆட்டங்களிலும் வெற்றியீட்டியுள்ளது.

* * *

கம்பளையில் விளையாட்டு அமைச்சுப் பகுதியினரால் நடாத்தி முடிவுற்ற சகல விளையாட்டுப் போட்டிகளின் விபரம் பின்வருமாறு:

மல்யுத்தம் சாம்பியன்ஸ்:
விக்கிரமபாகு முஸ்லிம் மகா வித்தியாலயம்,

கரப்பந்தாட்டம் சாம்பியன்ல்:
ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம்.

கிரிக்கெற் சாம்பியன்ஸ்:
கல்வி இலாகா, சுகாதார இலாகா, கூட்டு.

வலைப்பந்தாட்ட சாம்பியன்ஸ்:
ஜொலி பெண்கள் விளை. கழகம்,

உதைபந்தாட்டச் சாம்பியன்ஸ்:
நாவாக்கதறு விளை. கழகம்.

* * *

பதுளைப் பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் தர்மடுத்தாக் கல்லூரி முன்னணியில் உள்ளது.

* * *

ஆசிய ஆண் அழகன் போட்டியிற் கலந்துகொள்ள இலங்கையிலிருந்து மூவரை அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தெரிவு மலேசியாவில் நடைபெறவுள்ளது.

* * *

இலங்கை ஆண் ஆழகன் போட்டி சுகததாச உள் அரங்கில் இம் மாதம் 28ம் திகதி நடைபெறும். இப் போட்டிக்கு டாக்டர் குணவர்தன, ஒஸ்டின் ராஜகருண, காமினி பொன்சேகா, பக்கீர் அலி, வெசாக் பெறேரா, டகிறெபேட்ஸ், மார்சல், பெர்னந்து ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமை புரிவார்கள்.

* * *

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தால் 42 பேர் கொண்ட உதைபந்தாட்ட வீரர்கள் பயிற்சி பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் மற்ற மாகாணங்களிலிருந்து 8 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கோஷ்டி தெரிவு செய்யப்பட்டவுடன் செக்கோசிலவாக்கியாவுடனும் சீனவுடனும் சிநேகபூர்வமான ஆட்டங்களில் கலந்து கொள்வார்கள்

* * *

தேசிய குத்துச்சண்டைப் போட்டிகள் தற்சமயம் டிப்போ பொலிஸ் மேடையில் நடைபெற்று வருகின்றன. இதில் ஆகாயவிமானப்படை தரைப்படை, கடற்படை, டெமற்றகொடை யுனைடெட் குத்துச்சண்டைக் கழகம், சாகிரு குத்துச்சண்டைக் கழகம், பாடசாலைக் கழகம் முதலியன பங்குபற்றுகின்றன.

* * *

அகில இந்தியாக் குழிப் பந்துப் போட்டியில் கலந்து கொள்ள இலங்கையிலிருந்து மூவர் செல்வார்கள். மேஜர் துரைராசா, சோலி, டேவிட் இவர்கள்தான் அம்மூவரும். திரு. சோலி இக்கோஷ்டிக்குத் தலைமை தாங்குவார்.

* * *

நால்வர் கொண்ட இளைஞர் டென்னிஸ்கோஷ்டியொன்று தை மாதம் தென் இந்தியா செல்லவுள்ளது. இவர்கள் தமிழ்நாடு, திவேந்திரம், ஹைதரபாத் முதலிய இடங்களில் 4 போட்டிகளில் கலந்து கொள்வார்கள்.

* * *

இலங்கைப் படைகளுக்கான மல்யுத்தப் போட்டிக் கேடயத்தை இவ்ஆண்டு (ஆர்மி) தரைப்படை கைப்பற்றியுள்ளது.

* * *

தென் மாகாண மல்யுத்தச் சங்கத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் சென். அலோசியஸ் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது. காமினி விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

லுனுகலைப் பட்டணசபையால் நடாத்தப்பட்ட சகல போட்டிகளிலும் விக்டரி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுச் சம்பியன்களாக வந்துள்ளனர்.

றேபேட்சேனநாயகா கேடயத்திற்கான கிரிக்கெட் போட்டி இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

# உலக விளையாட்டுச் செய்திகள்

பங்களூரில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றிய சீ. ரி. எப். சீ. (C. T. F. C.) கழகம் பல தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளது. இப்போட்டிகளில் பல ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.

* * *

நியூசிலாந்தில் நடைபெறும் பிலியட்ஸ் போட்டியில் பங்குபற்றும் எம். ஜே. எம். லாபீர் பல ஆட்டங்களில் முற் பகுதியிற் தோற்றுப் பிற்குதியில் நான்கு ஆட்டங்களில் வெற்றிபெற்று இலங்கைக்குப் புகழைத்தேடித் தந்துள்ளார்.

* * *

இந்தியாவிற்கும், இங்கிலாந்திற்கு மிடையில் நடைபெறவுள்ள கிரிக்கெட் ஏனைய பரீட்சை (டெஸ்ட்) போட்டிகளிலும் சிறந்து விளங்கும் கோஷ்டிக்கும் வீரர்களுக்கும் பணம் பரிசாகக் கொடுக்க பம்பாயிலுள்ள விளையாட்டுப் பத்திரிகை ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

* * *

இந்தியாவில் சண்டிகார் என்னுமிடத்தில் நடைபெறும் 14 வயதிற்குட்பட்டோர் டென்னிஸ் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த சுரேஷ் சிவஞானம் இறுதி ஆட்டத்தில் விளையாடத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவ் இறுதி ஆட்டத்திலும் இவரே வல்லுநர் என்று நம்பப்படுகிறது,

* * *

அவுத்திரேலிய கிரிக்கெட் கோஷ்டிக்கும், பக்கிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்குமான (டெஸ்ட்) கிரிக்கெட் ஆட்டங்கள் வெகு விரைவில் ஆரம்பமாகவுள்ளது. தற்சமயம் அவுஸ்திரேலியாவில், பக்கிஸ்தான் கோஷ்டி சில ஆட்டங்களில் பங்குபற்றியுள்ளது.

நியூசிலாந்தில் நடைபெறும் உலக பிலியட்ஸ் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த சதீஷ் மோகன் விளையாடிய ஏனைய ஆட்டங்களிலும் வெற்றிபெற்று முன்னணியில் உள்ளார்.

* * *

முகமது அலிக்கும் கிறேசருக்குமிடையில் உலக அதிபாரக் குத்துச்சண்டை வீரருக்கான பட்டத்திற்குரிய போட்டி வெகு விரைவில் நடாத்த ஏற்பாடுகள் நடக்கின்றன. இவ்வாண்டு முகமது அலி பல குத்துச் சண்டைப் போட்டிகளிற் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளார்.

# மாதர் விளையாட்டுப் பகுதி

## மாதர் விளையாட்டு விபரங்கள்

ஆர்பிக்கோ கோஷ்டிக்கும், கிளாக்ச்சோ கோஷ்டிக்குமான 'பி' பிரிவு வலைப்பந்தாட்டப் போட்டி இறுதி ஆட்டம் வெகு விரைவில் நடக்கவுள்ளது.

* * *

வைத்திலிங்கம் கேடயத்திற்கான பெண்கள் ஹொக்கிப்போட்டிகள் இப்பொழுது இலங்கை மாதர் திடலில் (கொழும்பு) நடைபெறுகின்றன. இப்போட்டியில் சென்ற ஆண்டு சம்பியன்களாக வந்த பி. எம். எஸ். மாத்தளைக் கோஷ்டியே திரும்பவும் இக்கேடயத்தைச் சுவீகரிக்குமென நம்பப்படுகிறது.

* * *

சிங்கப்பூரில் நடந்த ஓர் குழிப்பந்தாட்டப் போட்டியில் செல்வி. பின். பர்னந்து வெற்றிபெற்றுக் கேடயத்தையும் பெற்றுக் கொண்டார். இவருக்கு எதிராக இவருடைய தாயாரும் விளையாடித் தோல்வியுற்றார்.

* * *

பதுளையில் பெண்களுக்கான ஹொக்கி, வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற

## மாதர் அறிமுகம்

### இந்திரா–பத்மினி

சீ. ரீ. அன்ட் எப். சீ. (C. T. & F. C) விளையாட்டுக் கழகத்தில் அங்கம் வகிக்கும் பத்மினி என்பவர் 15 வயது நிரம்பப்பட்டவர். இவர் பாடசாலையில் படிக்கும் காலம் தொட்டே விளையாட்டுத்துறையில் மிகவும் ஊக்கம் காட்டி வந்துள்ளார். தற்சமயம் பங்களூரில் நடைபெற்று முடிந்த மெய்வல்லுனர் போட்டிகளில் 15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் பெண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப்போட்டியிலும், நீளம் பாய்தல் போட்டியிலும் இரண்டாம் இடங்களைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுள்ளார். இவருடைய எதிர் காலம் மிகவும் பிரகாசமுள்ளதாயும் தாய் நாட்டிற்குப் பெருமைதேடித் தருவதாயும் இருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

---

விளையாட்டுக்களில் பயிற்சி அளிக்க விளையாட்டு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டுப் பயிற்றுநர் செல்வி, ப[illegible] முயற்சி எடுத்து வருகின்றார்.

# கலையும் வாழ்வும்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதசாரிகளாக தெரு வீதியில் நடந்து செல்கின்றோம். நாற்சந்திகளின் அண்மையிலும் நிற்க வேண்டியிருக்கிறது; சினிமா, நாடகம் என்றும், சந்தை கடை என்றும் பொது இடங்களுக்கும் செல்லுகிறோம். இங்கெல்லாம் மற்றவர்களுக்கு இடையூறு செய்யாமலும், மற்றவர் சிந்தனைக்கு நல்லவர்களாகவும் நடந்துகொள்வது சமுதாயப் பண்பாகும். ஒழுங்கும், கட்டுப்பாடும் கலந்து வரும் இவ் வாழ்க்கை நெறியைக் கலையாகத்தான் கருத வேண்டும்.

உணவு தயாரிப்பதைக் கலையின் வகைகளில் ஒன்றாக ஒப்புக்கொண்டோமானால் உணவருந்தும் விதத்திலும் கலைத்தன்மை மிளிர வேண்டும் என்பதைப் புறக்கணித்து விடுகிறோம். வயிறு புடைக்க உணவருந்தியபின், இரு வகையினரைப் பார்க்கிறோம் என்று வைத்துக் கொள்ளுவோம். நிதானமாகவும், புனிதமாகவும் உணவையெடுத்து அளவோடு அசைபோட்டு முறையாக உண்ணு[illegible] பார்த்தால், மிரு[illegible] வேண்டும் போல் நமக்கு அங்கலாய்ப்புத் தோன்றுகிறது. கொட்டியும், சிந்தியும், விகாரமாகக் கண்களையும் வாயையும் வைத்துக்கொண்டும், அள்ளி அள்ளி வாயிலே திணித்துக் கொண்டும் அவஸ்தைப்படும் ஒருவரைப் பார்த்தால் நாம் உண்டதுகூட வெளியேவரப் பார்க்கும்.

மிருகத்தோடு மிருகமாய் ஆதியிலே வாழ்ந்த மனிதனுக்கு ஆடையின் அவசியம் எவ்வளவோ ஆண்டுகளுக்கு முன்பே புரிந்துவிட்டது. பட்டையும், இலைகுழையும், மிருகங்களின் தோலும் அன்று அவன் மானங் காக்கப் பயன்பட்டன. பின் பருத்தி, பட்டென்று உடையின் தரம் உயர்ந்தது. உடைகளால் உடலின் பெரும் பகுதியை மறைத்துக்கொண்டு, நாகரிக மனிதர்களாகவும், அழகு நிரம்பியவர்களாகவும் எண்ணிக்கொண்டும், மதிக்கப்பட்டும் வாழ்ந்தார்கள். அது தான் முறையானதென்று இன்று வாழ்ந்துவந்தோம்.

சமுதாயக் கட்டுப்பாட்டையும், ஒழுங்கு முறைகளையும் பென்னம்பெரிய தலைச் சுமையாக எண்ணிக் கொண்டு திக்குமுக்காடு'பவர்களுக்கு அவற்றைத் தகர்த் தெறிய வேண்டும் போலத் தோன்றியிருக்க வேண்டும். மனிதரென்று இல்லாமல் ஏன்மிருகமாக வாழக்கூடாது? என்ற விபரீத சிந்தனையின் விளைவாக இன்று ஆடைக்கலையில் மாற்றமொன்று வந்திருக்கிறது. இதைப்பார்த்துச் சிரிக்கிறார்கள. சிலர் அழவுந்தான் செய்கிறார்கள். வரவேற்பவர்கள் வளர்ந்து வருகிறார்கள். ஆண்கள் பெண்களாகவும், பெண்கள் ஆண்களாகவும் மாறவேண்டும் என்று உள்ளூற எண்ணியதன் விளைவோ தெரியாது, ஆடைக் குறைப்பும், ஆள் மாருட்டமும் இன்று நடைபெறுகிறது. மானம் காப்பது கலையா? அல்லது மானங் கெடுப்பது கலையா என்பதை மக்கள்தான் சிந்திக்க வேண்டும். (தொடரும்)

## மாலையில் ஒரு மலர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிறர் இல்லில் அல்லது பிறர் தயவில் இருப்பவர் பகுத்துண்ணும் அறத்தை மேற்கொள்ள முடியாது என்பதை விளக்கத் தம் இல்லில் என தம் என்ற அடைமொழியையும் பிறர் உழைப்பால் வந்த பொருளைக் கொடுப்பது அறமுமாகாது பெருமையும் ஆகாது என்பதை விளக்கத் தமது பாத்துண்டற்றால் என தமது என்ற அடைமொழியையும் அழகுறச் சேர்த்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் வாழ்வும்

"அவதானி"

**உண்மை, ஒழுங்கு தெளிவு, கட்டுப்பாடு ஆகிய பண்புகளோடு நடைபெறுகின்ற செயல்கள் எல்லாவற்றுக்கும் அழகுண்டு.**

இறைவன் தன்னிகரில்லாத் தலைவன் மட்டுமல்ல, அவன் ஒப்பற்ற கலைஞனுமாவான். அண்டசராசரங்களனைத்துமே அவனது அழகிய சிருஷ்டிகள். பிரமிக்கவைக்கும் அவனது சிருஷ்டிகளத்தனையையும் முழுமையாக அறிந்தவர்களில்லை. ஏதோ ஒரு சிலவற்றைப் பார்த்தும், கேட்டுமிருக்கிறேன். அவை விபரிக்க முடியாதபடி, அழகின் முழுமையைப் பெற்றிருக்கின்றன. இறைவன் நியதிப்படி அணுவளவும் பிசகாத காலப் பிரமாணங்களோடு அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. எண்ணித் தொலையாத உயிரினங்கள் மட்டுமென்ன சூரியர், சந்திரர்களும், மற்றைய கிரகக் கூட்டங்களும் ஆங்காங்கு சிதறிக் கிடந்து அண்ட வெளியில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரக் கூட்டங்களுமே ஏதோ ஒரு கட்டுப்பாட்டு நியதிக்குள் அடங்கித்தான் இயங்குகின்றன. இந்த இயக்கங்களினால் உண்டாகும் பயன்களுக்கும் அழகுக்கும் ஈடேது? இணையேது? அவை ஒப்பேயில்லாத கலைஞனின் சிருஷ்டிகளல்லவா?

இக்கலைஞன் உண்மையானவன்; ஆதியந்தமில்லாதவன்; எல்லாமே தெரிந்தவன் எல்லாம் செயவல்லவன்; நியதி என்ற கட்டுப்பாட்டுடன் எதையும் செய்கின்றவன். ஆனபடியால் எல்லாமே ஒழுங்காக நடைபெறுகின்றன.

உண்மை, ஒழுங்கு, தெளிவு, கட்டுப்பாடு ஆகிய பண்புகளோடு நடைபெறுகின்ற செயல்கள் எல்லாவற்றுக்கும் அழகுண்டு; தெய்வீகமும் உண்டு அழகும் தெய்வீகமும கலைப்பண்பாகும்.

மக்கள் வாழும் வகை ஒவ்வொன்றிலும் ஒழுங்கும், புனிதமும் ஒன்ருக இணைந்து விட்டால் அதுவே கலையாகிவிடும். மக்கள் சிந்தனையும், செயலும், பேச்சும் ஒன்ருக—புனிதமாக இருந்து விட்டால் எங்குமே அழகு சுடர்விடுவதை அவதானிக்கலாம. ஆகவே வாழ்க்கை வேறு கலை வேறு என்ற தப்பெண்ணம் நீங்கிவிடும். கலைவேறு; கலைஞன்வேருனவன்; பொது மக்கள் வேருனவர்கள்; வாழ்க்கை வேருனது என்று எணணிக் கொள்வது தவறு.

இறைவன் சிருஷ்டியில் அமைந்துள்ள எல்லாவற்றுக்கும் கலைத்திறம் உண்டு. மயில் அழகாக ஆடுகின்றது; கிளியும், குயிலும் குரலெடுத்துப் பாடுகின்றன; சிங்கம் கெம்பீரமாகத் தலைநிமிர்ந்து பார்த்து நடக்கும் அழகுக்கு நிகருண்டா?

மானின் மருண்ட பார்வையும், துள்ளியோடும் கொள்ளையழகும் யார்மனதை ஈர்க்காது? கொடிய விஷப் பாம்பின் பல வண்ணப் புள்ளிகள் பரவிய உடலழகு, அது நெளிந்தூரும் போது புலனுவதில்லையா? இப்படியாக புல், பூண்டு, செடி, கொடி, மிருகம், பறவை எல்லாவற்றுக்குமே வகை வகையான அழகுகளுமுண்டு. அவை இறைவன் சித்தப்படி வரம்பை மீருது என்றுமே ஒன்ருக வாழ்ந்து கொண்டிருப்பதால் நிரந்தரமான அழகோடு என்றும் வாழுகின்றன.

மனிதன் வாழ்வையும், கலையையும் பிரிந்து நோக்குகிருன். ஏதோ நிரந்தரமல்லாத—உண்மையல்லாத போலித்தனங்களைக் கையாண்டு தன்னையும், பிறரையும் ஏமாற்றி வாழ முனையும்போது கலைப்பண்பு விட்டு அகன்று விடுகிறது. வெற்றெலும்பை நாய் சுவைத்து மகிழுவதைப் போல அவனும் மகிழ்ச்சியடைவதாக எண்ணிக் கொள்ளுகிருன். வெற்றெலும்பைச சுவைக்கும் நாய் தனக்கு ஊறுதேடிக் கொள்வதைப்போல, போலி வாழ்வு நடத்தும் மனிதனும் தான் வாழும் சமுதாயத்தைப் பாழாக்கிவிடுகிருன். இதன் பயனை இன்று நாம் அரசியலிலும், மற்றும் வாழ்வுப் போராட்ட முயற்சிகளிலும் தெளிவாகப் பார்க்கிறோம் எங்கும், எதிலும் போலித்தனம் புரையோடிக் கிடக்கின்றது.

மனிதன் பேசுகிருன் என்று பெருமைப்படுகிறோம். இன்றைய மனிதன் பேசக்கூடியவனுக இருப்பதால் தான் இன்னல்கள் எவ்வளவோ இன்று ஏற்படுகின்றன. சமுதாயக் குழப்பங்கள் உண்டாகின்றன. சிந்தனையிலும், பேச்சிலும், செயலிலும் ஒத்துழையாமை இயக்கம் நடைபெறுகிறது. ஒன்றிலும் புனிதமில்லை; ஒழுங்கில்லை; கட்டுப்பாடுமில்லை. இவையில்லாவிட்டால் அழகுமில்லை. அழகுமிளிராவிட்டால் கலைக்கு இடமேது? இனித்தமொழி—பண்யான மொழி—பேசுகின்றவர்களுக்கும், கேட்போருக்கும் நலம் தரும் மொழி—அதுவே பேசவேண்டிய மொழியாகும். பேச்சுக் கலைக்கு இவைதான் வேண்டும். பொய்யும், பித்தலாட்டமும் நிறைந்து, அருவருக்கச் செய்யும்பேச்சுக்களே இன்று மக்கள் மனதைப் புண்படுத்திக் கொண்டபின் காற்ருேடு கலந்துவிடுகின்றன. இவற்றைவிடக் குயிலினங்களின் "கூக்கூ" என்ற மொழி இனிமை தருகின்றதே. பேச்சுக்கலை தெரிந்தோர், உறவு முறைகளைப் புலப்படுத்தும் வகையில், அன்பை அள்ளிச் சொரியும் வகையில் தகுதியினைக் காட்டும் வகையில், தானும், பிறரும் நன்மை பெற்று இன்பமடையும் வகையில் பேசவேண்டும். அல்லது அந்தத் திரு வாய்களை உணவரைக்கும் யந்திரமாகப் பயன்படுத்திக் கொள்வது மிக நல்லது; யாவர்க்கும் நல்லது.

தந்தையாகவுந் தாயாகவும், சகோதரர்களாகவும், மற்றும் உறவினர்களாகவும், நண்பர்களாகவும், அயலவர்களாகவும் தற்செயலாக இடைநடுவிலே சந்திப்பவர்களாகவும், வாழ்ந்து கொண்டிருக்கிருேம். பெரியாரையும் சந்திக்கிருேம். இப்படியாக ஒவ்வொரு வகையினரைச் சந்திக்குபோது அவர்கள் மனம் புண்ணுகாமலும், எம்மைப்பற்றி உயர்வாக எண்ணும்படியும் எமது செயல்கள் புடம் போடப்பட்டனவாக அமையவேண்டும். அவரவர் நிலைக்கேற்ப எம்மைச் சீர்செய்து கொள்வதும் வாழ்க்கைக் கலையின் ஒரு அமசமாகும். இப்படி எத்தனை பேர் சிந்தித்துக்கொண்டு அன்ருடம் வாழுகிருேம்? செக்கென்ன? சிவலிங்கமென்ன? எல்லாமே ஒன்று தான் என்று எண்ணிக் கொண்டிருப்பவர் தொகை தான் இன்று வளர்ந்து விட்டது.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## உள்ளக்கிழியில் இறை திருவுரு

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிராவ(ண்)ணம் இருத்தல்-மூச்சுப் பயிற்சியாம் பிராணுயாமம் செய்தல் (வீணே மூச்சினை வெளிவிடாது அடக்கிப் பயிற்சிக்குட்படுத்தல்) உற்றுநோக்குதல் - தான் சிந்திக்கும் கடவுள் திருவுருவின் வயமாதல்.

உள்ளக்கிழியின் உரு எழுதல்-கடவுள் திருவுரு வெண்மையான உள்ளமாகிய துணியிற் படமெழுதினுற்போலப் படுதல்.

(2ஆம் அடி) உயிர் + ஆவணம் (அடிமைஓலை அல்லது விலைத் துண்டு) + செய்திடல் = தன், உயிரை இறைவனுக்கே அடிமையாக்கி அவ்வடிமைத் தன்மை துண்டு எழுதி விடல்.

உன்கைத்தந்தால் = இறைவனிடமே அவ்வடிமைச் சீட்டைக் கொடுத்தவிடுதலால்; உணரப்படுவன்-அடியான்; ஒட்டிவாழ்தல்-(அடியாரோடு இறைவன் திருவருளால்) சேர்ந்து வாழுதல். உயிர்தன்னைச் சம்பூரணமாக இறைவனுக்கு ஆட்படுத்திவிட்டாற் கிட்டுவது ஒரே இன்பம்; பேரின்பம் உள்ளக்கிழியின் இறை திரு உரு எழுதி, இறைமயமாய் அழுந்தி, அதனுல் மெய்யடியார் நடுவிலிருந்து தன்னை மறந்து தலைவன் தாளைத் தலைப்படும நாவேந்தர் தந்த பாடலைப் படிக்கவேண்டியவர் நாம். பல்லவர் கலைக்கோயிலுக்குச் சொற்கோயில தந்தருளிய அப்பரை வாழ்த்திக் கல்லும் கவிதை சொல்லும் தமிழ்நாட்டுச் சிற்பச்சிறப்பை அடுத்துப் பார்ப்போம்.

## அவர் நல்ல பேச்சுக்காரர்

"வட்டூர்ப் பங்கயமணுளன்"

''அவர்பேச்சைக் கேட்டாலே போதும்'' என்ருர்
அடுத்தவீட்டுக் கந்தப்பர்; ''அவரைப் போலே
கவர்ச்சியுடன் பேசுதற்கு யாரி ருப்பார்?''
"மனுஷன்வந்து நின்ருலே போதும்" என்றும்
''தவறில்லை அவர்நல்ல பேச்சுக் காரன்
தனித்தமிழும் இடையிடையே ததும்பி யூறும்''
''இவர்தான்நம் தமிழ்காக்கும் உண்மைவீரர்''
என்றெல்லாம் எத்தனையோ விமர்ச னங்கள்,

அடித்திட்டார் மேசையிலே; தமிழன் வீரம்
பிறந்தகதை வளர்ந்தகதை பலவும் சொன்ஞர்
துடித்திடுவீர்! என்றுசொன்னுர் தமிழே காக்கத்
துணிந்திடுவீர்! என்றெல்லாம்தகர்த்தெறிந்தார்
படித்திடுவீர்! தமிழ்க்கலைகள் என்றும் சொன்னுர்
பாவிநான் கலைபடித்துக் கவிஞ ஞகி
இடிப்புரைகள் எத்தனைதான் கேட்டி ருப்பேன்
இவர்செய்த தமிழ்த்தொண்டு என்ன தானே?

நாடகங்கள் ஆடுவதில் வல்லவர் நீர்
நாலுமுழ வேட்டியினைக் கட்டிக் கொண்டு
மேடையிலே ஏறிநின்று துள்ளும் போது
மேலான நடிப்பதனை மெச்சா விட்டால்
பாடையிலே போனதமிழ் நெஞ்செ னக்கு
இல்லையென்றே பேசிடுவீர் இதைத் தவிர்த்து
வீடெல்லாம் தமிழ்முழங்கச் செய்தீ ரோநீர்
வீதியெலாம் கலைசெழிக்கச் செய்ய லாச்சோ?

இனம்வாழ வேண்டுமெனிற் கலைகள் வேண்டும்
கலைவாழ நம்மிடையே கலைஞர் வேண்டும்
பணம்கொட்டி வைப்பவனே கலைஞன் என்னும்
காலமதை மாற்றிடுவீர் இதுவே உண்மை
மணம்வீசும் கலைக்கூடம் அமைத்துப் போவீர்
மதிப்பொன்று தமிழ்க்கலைக்கு ஏற்றி வைப்பீர்
குணமான நற்கலைகள் கற்ற வர்தாம்
வீணர்கள் என்றநிலை மாற வைப்பீர்.

சாதிவெறி அழியவில்லை வீதி தோறும்
சண்டைகளும் சச்சரவும் மீறிப் போச்சு
வேதனைகள், உயர்வுதாழ்வு, ஏழை கண்ணீர்
இவையெல்லாம் அத்துமீறிப் போக லாச்சு
ஓதியநற் கலைச்செல்வம், பண்பா டெல்லாம்
காட்டிடையே விதைத்தநெல்லாய்க் கருக லாச்சு
காதிரண்டும் புளித்திடவே கத்து கின்றீர்
கனித்தமிழைக் காக்கின்றீர் போது மையா!

## உங்களை மகிழ்விக்க வருகின்ருர்கள்

மார்கழித் திங்கள் 25ஆம் நாள் நள்ளிரவு **யேசுபிரான்** பூவுலகில் மனிதராகப் பிறந்த நன்ஞள்: பூ முகத்தில் நன் மனமுள்ளோர்க்குச் சாந்தி பூத்த பொன்ஞள், அந்நாளிற் நினைவாகக் கலை. கல்வி, கலாசாரக் காப்புக் கழகத்தார்ப் பாடகர் குழுவினர் தங்கள் இல்லத்திற்கும் வருகை தருவார்கள்.

அவர்களை மனமுவந்து ஆதரித்து மகிழ்விக்குமாறு தங்களைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகின்ருேம்.

தங்கள் நன்றியுள்ள
**கழகஉறுப்பினர்.**

அமைப்பாளர்

1. க. கனகையா (துணைத்தலைவர்)
2. ச. பெனடிக்ற் (செயலாளர்)
3. ஜே. எம். இராசு (துணைச் செயலாளர்)
4. ம. யோசேப்பு (உறுப்பினர்
5. தா. சிவபாதசுந்தரம் (உறுப்பினர்)

குறிப்பு :

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் மேற்படி கழகப்பணி இடம்பெறும் என்பது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் வருகிறது!

ஜேயார் மூவிஸ் **ஞான ஒளி**



இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிவாகை சூடியது.

நடிகர்கள் :

* நடிகர் திலகம்
* சாரதா
* சுந்தரராஜன்
* நிர்மலா

மற்றும் பலர்.

திரைக்கதை — டைரக்ஷன்
P. மாதவன், B. A.

வாருங்கள்! வணக்கம்!

ரூபா 15க்கு மேற்பட்ட பாடப் புத்தகங்கள் வாங்குவோருக்கு

## 1973 கலண்டர் இனும்!

## வே. ஆ. சிதம்பரப்பிள்ளை சன்ஸ்
(புத்தகசாலை)

கல்வித் திணைக்களம் வெளியிடும் சகல பாடப் புத்தகங்களும்,
பாடசாலை, மற்றும் அலுவலகங்களுக்குரிய உபகரணங்கள்,
கல்யாண வைபவங்களில் பரிசாக வழங்கக்கூடிய
எவர்சில்வர் பொருட்கள்
அனைத்தும் சகாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

43, பெருந்தெரு, திருக்கோணமலை.

இப்பத்திரிகை, சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்று, யாழ்ப்பாணம் டேவிட் வீதி 28ஆம் இலக்கத்திலுள்ள திரு. ச. பெனடிக்ற் அவர்களால் வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : புலவர் ம. பார்வதிநாதசிவம். 23-12-72.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org